RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22255

OPEN ACCESS

# நவீன காலத்தில் அங்கதமும் அதன் போக்கும்

பெ. ராஜேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, C.S.I. பிஷப் சாலமன் துரைசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர், தமிழ்நாடு, இந்தியா.

# Contemporary Satire: Transformation, Media, and Social Expression

P. Rajeswari [a, *]

[a] Department of Tamil, C.S.I Bishop Soloman Doraisawmy College of Arts and Science, Karur, Tamil Nadu, India

* Corresponding Author: rajeswariperiyasamy91@gmail.com

Received: 18-01-2022
Revised: 03-04-2022
Accepted: 12-04-2022
Published: 30-04-2022

Check for updates

## ABSTRACT

Literary genres and modes of expression have continuously evolved in response to changing social, cultural, and technological contexts. Alongside the development of literary forms, the techniques employed to represent and critique social realities have also expanded. Among these techniques, satire (aṅkatam) has emerged as a significant mode of literary and social expression. Traditionally employed in poetry and narrative literature, satire has undergone substantial transformation in the modern era, particularly with the expansion of social media and digital communication. The emergence of new media platforms has enabled satire to move beyond conventional literary forms and acquire diverse visual and multimodal forms of expression. This study examines the development, transformation, and contemporary trajectory of satire, focusing on its changing forms and functions in the modern context. Particular attention is given to the transition of satire from traditional literary forms such as poetry and fiction to contemporary modes including cartoons, political and social illustrations, memes, and other digitally mediated forms of communication. These emerging forms enable complex social issues, public opinions, criticism, and humour to be communicated rapidly and accessibly to wider audiences. The study analyses how technological developments and social media have transformed the production, circulation, and reception of satire. It further considers the continuing role of satire as a means of questioning social practices, expressing criticism, and reflecting contemporary cultural conditions. The study concludes that satire has not diminished with the transformation of literary and communication practices; rather, it has adapted to new media environments and expanded its influence through visual, digital, and participatory forms of expression.

**Keywords:** Satire, Communication, Modern Era, Social Expression

## முன்னுரை

காலந்தோறும் இலக்கிய வகைமையும் வளர்ச்சியும் பெருகிய வண்ணமுள்ளன. இலக்கியங்களில் பயன்படுத்தும் உத்திகளும் விரிவடைந்துள்ளன. சமூக வலைத்தளங்களின் வரவால் வடிவ மறுமலர்ச்சி அடைந்து பெருகியுள்ளன. பெருமளவு வளர்ந்து தனித்துறையாக உருவெடுத்த உத்திகளில் அங்கதம் முதன்மையிடம். இது இலக்கியங்களில் கவிதைகளாகவும், கதைகளாகவும் ஆக்கம் பெற்று இன்றைய காலகட்டத்தில் கேலிச்சித்திரம், கருத்துப்படங்கள், போன்மி ஆகியவற்றால் தனது செல்வாக்கினை நிறுவியுள்ளதை இக்கட்டுரை ஆய்கின்றது.

அங்கதம் சொற்பொருள் விளக்கம்:

அங்கதம் என்பதை அகம் + கதம் என்று பிரித்து அகத்தின் சினம் (கதம்) என்று பொருள்படும் என்பர் அறிஞர்கள் சான்றாக,

"கதங் காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி

அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து" குறள் - 130

என்ற குறளைக் காட்டி "கதம்" என்பது கடுஞ்சினத்தைக் குறிக்கும். எனவே, அகத்தின் சினம் என்று பிரித்தல் சாலப் பொருத்தமாக அமையும் என்பர். அங்கதம் என்பது பாவலர் கூறும் தீச்சொல்லிற்கு பெயராம் என்பதைக் கயாதார நிகண்டு

"அங்கதந் தோள்வளை பாவலர் தீச்சொல்லரவு பொய்யாம்" - கயாதர நிகண்டு,நூ.எண் 507

என்று குறிப்பிடுகின்றது. அங்கதத்தை ஆங்கிலத்தில் Satire என்று அழைப்பர். இது Satura என்ற இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. Satura என்றால் கதம்பம், குழப்பம் என்று பொருள்படும்.

Satire என்பதற்கு வசைப்பாட்டு, அங்கதம் என்று பால்ஸ் அகராதி பொருள் தருகின்றது. மேலும், பெரும்பாலும் Lampoon என்பதற்கும் கீழ்த்தர வசைப்பாடல், பழிப்புரை, நகைத்திறனுடன் குற்றங்காணுதல் என்ற பொருண்மைகளைத் தருகிறது. ஆனால். இலக்கிய உலகில் Satire என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலைத்துள்ளது.

## அங்கதம் வரையறைகள்

அங்கதம் அயல்நாடுகளில் தனித்துறையாக விளங்குவதால் பல்வேறு வரையறைகளும் விளக்கங்களும் எழுந்த வண்ணம் உள்ளன. அங்கதத்தை தனிப்பெரும் துறையாக வளர்த்தெடுத்த பெருமை மேற்கத்திய நாடுகளையே சாரும்.

அங்கதம் என்பது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு என்கிறார் சான்சன். அங்கதப் படைப்பு ஒரு குறிக்கோளைக் கொண்டதாக அமைந்தது, கேலியும் நகையும் கலந்து திருத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் படைப்பது எனப் பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் முன்மொழிகின்றது.

புகழ்பெற்ற அங்கத எழுத்தாளர்களான டிரைடன், டிப்போ ஆகியோரின் கூற்றுப்படி குறைகளின் சீர்திருத்தமாக அங்கதம் விளங்குகிறது. தமிழுலக அங்கதத்தில் மிகப்பெரிய ஆராய்ச்சி செய்த மு. அருணகிரி அங்கதம் என்பது நேர்மையானவரை நீதி பிறழாமல் காக்கும் கருவியேயன்று கெட்டவரை நல்வழிப்படுத்தும் வகையில் அமையாது என்கிறார்.

மேற்கண்ட வரையறைகளின்படி தனிப்பட்ட விருப்புகள், வெறுப்புகள் அடிப்படையில் சமுதாய பயன்பாட்டை நோக்கியும் தனிமனிதனின் (அ) சமூகத்தின் (அ) இயக்கத்தின் குறைகளை எள்ளளுக்கு ஆட்படுத்துவது அங்கதம் என்பது புலனாகின்றது.

## தொல்காப்பியரின் அங்கதக் கோட்பாடு

தொல்காப்பியர் அடிவரையற்ற யாப்பு வகைகளில் ஒன்றாக அங்கதத்தைக் குறிப்பிடுகிறார். மேலும் இந்த அங்கதம் கூற்றிடை வைத்த குறிப்பாக வரும் என்பதையும் பதிவு செய்கிறார். இக்குறிப்பு மொழியை,

'எழுத்தொடும் சொல்லோடும் புணரா தாகிப்

பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே" தொல்,பொருள், -429

என்று விவரிக்கிறார். ஆனால், இது வாய்மொழி வழக்காறு. அங்கதம் என்பது இலக்கிய அமைப்பில் வெண்பா யாப்பில் வரும் என்பதையும் அதன் இயல்பையும்,

'வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்

அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்" தொல் , பொருள், -434

என்ற நூற்பாவின்வழி குறிப்பிடுகிறார் இதன்மூலம் அங்கதச் செய்யுள் வசை, நகை ஆகியவற்றை மையமாகக் கொண்டு அமையும் என்பதை அறியமுடிகிறது. இத்தகைய முடிபானது இன்றைய கால அங்கதக் கோட்பாட்டிற்கு பொருத்தமானது ஆகும். இதுஇருவகைப்படும். அவை,

'அங்கதந் தானே அரில்தபத் தெரியின்

செம்பொருள் கரந்தது எனவிரு வகைத்தே" -தொல் , பொருள், -423

என்பவையாகும். மேலும், இவ்வகைப்பாடு ஆங்கிலத்தில்

1.நேரடி அங்கதம்

2.மறைபொருள்அங்தம்

என்று இருவகையாகக் கூறப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயல்நாடுகளில் பேரளவில் வளர்ச்சி பெற்ற அங்கதத்தின் கோட்பாடுகளை தொல்காப்பியர் கி.மு 2 ஆம் நூற்றாண்டிலேயே வெளியிட்டிருக்கிறார்.

அங்கதத்தின் பிரதிபலிப்புகள் (அ) வெளிப்பாடுகள்

1. வசை (அ) பழிப்புரை - Invective

2. எள்ளல் - Sarcssm

3 இன்பியல் குறிப்பு முரன் - Comic Irey

4. துன்பியல் குறிப்பு முரன்

தமிழில் வசை மற்றும் எள்ளல் பானியிலேயே அங்கதங்கள் வெளிவருகின்றன.ஔவை மற்றும் கம்பனின் விவாதத்தில் வசைபாடுவதை,

'எட்டேகால் லட்சனமே எமன்ஏ றும்பரியே

மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்

கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே

யாரையிடா சொன்னாய் அது?" தனிப்பாடல் திரட்டு பகுதி 1- பா.எண்17

என்ற பாடலால் அவலட்சணம், எருமை, மூதேவி, கோட்டானே என்று நகைத்து வசைபாடுவதை அறியமுடிகிறது.

## நவீன காலத்தில் அங்கதத்தின் போக்கு

மேலை நாடுகளில் பெருமளவில் வளர்ச்சி பெற்ற அங்கதம் தமிழுலகில் ஒரு பாடலில,; ஒரு செய்யுளில், ஒரு கருத்தில் பயன்படுத்தப்படும் உத்தியாகவே பயன்பட்டு வந்தது. சங்க காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தென்பட்ட அங்கதம், பத்தி இலக்கிய காலத்தில் சுவடின்றிப் போனது. மீண்டும் இடைக்காலத்தில் தோன்றிய உதிரிப்பாடல்களின் வழி 'அங்கதம்" தனது இருப்பை விரிவுப்படுத்தியது. பிற்காலத்தில் ஒரு இலக்கியம் முழுவதும் ஆட்சி செய்கின்ற வகையில் இடம் பெற்றுள்ளது. மருமக்கள் வழி மான்மியம், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், இருண்டவீடு ஆகியவை முழுமையான அங்கத உத்தியில் பாடப்பட்ட இலக்கியங்கள். இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக அடையாளம் இன்றி வாழும் மனிதன் கூட புதுக்கவிதை, ஹைக்கூ, சென்ட்ரியு, லிமிரிக் என்று கவிதைகளை சமூக வலைத்தளங்களில் பதிவிடும் சூழல் தோன்றிவிட்டது. கட்டற்ற கவிதைகளின் வழி தனிமனிதன், அரசியல், சமயம் ஆகியவற்றின் குற்றங்குறைகளை எடுத்துரைக்க அங்கதத்தை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். கேலிச்சித்திரங்கள், கருத்துப்படங்கள், போன்மி, கவிதைகள் ஆகியவை கட்புலனம், முகநூல், மற்றியம், படவழி போன்ற சமூக வலைதளங்கள் வழியாக பரவிய அங்கதத்தை,



என்று அங்கதத்தின் வளர்ச்சி தமிழுலகில் விரிந்து கொண்டு செல்கிறது. எத்தகைய தொலைத்தொடர்பு, தகவல் தொடர்பு ஊடகங்கள் ஆயினும் அங்கதத்தை விடுத்து உரைக்கவியலாது.

## இலக்கியங்களில் அங்கதம்

இலக்கியங்கள் ஓர் இனத்தின் அடையாளமாக கொண்ட முதல் இன்று வரை விளங்கி விடுகின்றது. அழிந்து போன இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றைக்கூட இலக்கியங்கள் மீட்டிருப்பதை சிந்து சமவெளி நாகரிகம், லெமூரியா கண்டம் போன்ற சான்றுகளின் வழி அறியலாம். புதுக்கவிதை, மரபுக்கவிதை, நாவல், சிறுகதை ஆகிய நவீன இலக்கியங்கள் அங்கதத்தை உத்தியாகக் கொண்டிலங்குகின்றன. தனிப்பாடல்கள் அங்கதத்திற்கு மறுமலர்ச்சி ஊட்டியதைப் பயன்படுத்தி நவீன இலக்கியங்கள் அங்கதத்தை ஆலமரமாக வளர்த்துவிட்டது எனலாம். முழு இலக்கியத்திலும் அங்கதத்தைப் பயன்படுத்திய பெருமை கவிமணியையே சாரும். மருமக்கள் வழி மாண்மியம் என்ற இலக்கியத்தின் வழி மருமக்கள் தேய முறையை அங்கதத்திற்கு உள்ளாக்கி ஒழிய வேண்டும் என்ற உணர்வை நகைச்சுவை வழி உணர்த்துகின்றார்.

இவளொரு கண்ணுக் கிணைஆம் இந்திரன்

ஆயிரம் கண்ணும் ஆகா துண்மை

பின்னே நோக்கிலும் முன்னளை கூறியும்

முன்னே நோக்கிலும் பின்னளை கூறியும்

எறும்பும் காணா இடத்தினுள் காண்போம்

புகையும் நுழையா இடத்திவள் புத்திபோம்.....

மருமக்கள்வழி மான்மியம், மாமி அரசியல் படலம் ,பா.வரி 15-20

என்று மாமியின் குணத்தையும், உருவத்தையும் நகைக்குள்ளாக்கி வருணிப்பதை அறிய முடிகிறது. இன்று சோ. இராமசாமி, புவியரசு, அப்துல் ரகுமான், புதுமைப்பித்தன் போன்ற கவிஞர்கள் தங்களது படைப்புகளில் அங்கதத்தை கையாண்டுள்ளனர். பாரதிதாசனின் இருண்டவீடு காவியம் நகையுணர்வோடு கல்லாதவரின் இழிநிலையையும் கல்வியின் அவசியத்தையும் புலப்படுத்துகின்றது.

அங்கதத்தின் போக்கு இன்று சமூக குற்றங்களை எடுத்துரைத்து, தவறிழைப்பவர்களைச் சாடுவதாக உள்ளது. சமுதாய உணர்வோடு செயல்படும் கவிஞர்கள் அங்கதத்தை பெருமளவில் கையாள்கின்றனர் என்று முனைவர் இ.மறைமலை சுட்டுகின்றார். இன்றைய அரசியல் உலகின் கட்சித் தாவலை கவிஞர் மீரா,

எங்கள் ஊர் எம் எல் ஏ

ஏழுமாதத்தில்

எட்டுதடவை

கட்சி மாறினார்

மின்னல் வேகம்

என்ன வேகம்

இன்னும் எழுபது

கட்சி இருந்தால்

இன்னும் வேகம்

காட்டியிருப்பார்” மீரா - ஊசிகள் - வேகம்- பக் 15

என்று அங்கதப்படுத்துவதைக் கணமுடிகிறது. மேலும் எழுத்தாளனின் சமகால அரசியலைப் இக்கவிதை படம்பிடித்துக் காட்ட அங்கதம் ஒரு கருவியாக செயல்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. வாசலை விட்டு வெளியே காலையில் வரும் மனிதன் மாலை வீடு திரும்பும் வரை நடிகனாகவே வாழ்கிறான். இதனை அறிந்தே ஷேக்ஸ்பியர் உலகம் ஒரு நாடகமேடை என்றுரைத்தார். தனக்காகவும், சமூகத்திற்காகவும் வேடமிட்டு வாழும் மனிதனின் போலித்தனத்தை பலராமன்,

'சாமியைக் கும்பிடும் மாமிக்குச் சங்கிலியில் கவனம்" - இ.மறைமலை, புதுக்கவிதை உத்திகள், பக்-91

என்று நையாண்டி செய்வதை இக்கவிதை புலப்படுத்துகிறது. இவ்வாறாக இலக்கியங்களில் அங்கதம் தனது செல்வாக்கினால் சாமானியனும் உலகியலைப் புரிந்துகொள்ள ஏதுவாக அமைகிறது எனினும் மிகையன்று.

## சமுதாய ஊடகங்களில் அங்கதம்

அறிவியலின் அளப்பறிய வளர்ச்சியை பறைசாற்றிக் கொண்டிருப்பது சமூக வலைத்தளங்களே. 'உலகம் உள்ளங்கையில்" என்ற வாசகத்தின் மையப்புள்ளி சமூக வலைதளங்களே. நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் வளரும் சமூக வலைதளங்கள் பல்துறை வளர்ச்சிக்கு வித்திட்டவை. மின்னஞ்சல் (**email**), படவரி, (instragram) பற்றியம் (messenger, கீச்சகம் (twitter), புலனம் (whats app), முகநூல் (facebook) போன்ற சமூக வலைத்தளங்கள் வருடங்களை வினாடியாக மாற்றியவை. சமூக வலைத்தளங்கள் இன்றைய சூழலில் பொழுதுபோக்கு சார்ந்து மாறிவரினும் சமூக உணர்வோடும் அக்கறையோடும் செயல்படுவதை பல்வேறு தருணங்களில் உணரமுடிகின்றது. ஒருதுறைசார் கருத்துகள், பொருண்மைகளை சமானியனுக்கும் தெரியப்படுத்திய பெருமை சமூக வலைத்தளங்களையே சாரும். அங்கொன்றும் இங்கொன்றுமாய் தென்பட்ட அங்கதம் அளவளாவிய வளர்ச்சி பெற சமூக வலைதளங்கள் பேருதவியாய் நிற்கிறது. இன்று இலக்கியங்களில் உலாவருவதைக் காட்டிலும் சமூக வலைதளங்களில் பயன்பாடு மிகுதி எனலாம். தனிமனிதன், அரசியல் மற்றும் சமுதாயம் சார்ந்த சீர்கேடுகள், குற்றங்கள் மற்றும் குறைகளை எதிர்க்க அங்கதத்தை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர்.

### செய்தித்தாள்கள் வளர்க்கும் அங்கதம்

செய்தித்தாள்கள்நாட்டின் நான்காவது தூண். இவை அங்கதத்தை கேலிச்சித்திரங்கள் வழி வளர்க்கின்றன. 'சொற்களால் கட்டமைக்கப்பட்ட அங்கதத்தின் சுருக்கமும் விசாலப்பார்வையுமே கேலிச்சித்திரங்கள் உருவாக காரணமாயின. தமிழுலகில் முதன்முறையாக கேலிச்சித்திரத்தினை அறிமுகப்படுத்தியவர் பாரதி. ஆங்கிலேயர் ஆட்சியின் குறைகளை 'இந்தியா" என்ற இதழில் கேலிச்சித்திரம் மூலம் வெளியிட்டார். கேலிச்சித்திரம் (அ) கேலிப்படங்கள் என்பவை நகைச்சுவையைத் துண்டும் வண்ணம் வரையப்படும் சித்திரங்கள் ஆகும். பல்வேறு பக்கங்களில் உரைக்க முடியாத செய்தியை ஒரு படத்தில் உரைத்துவிடும். சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளின் குறைகளை படத்தின் வழி விமர்சிப்பது. பெரும்பாலும் புகைப்படங்களை ஒழுங்கற்ற உருவமாக வரைந்திருப்பர். இதனை (கேலிப்படம்) என்றும் அழைப்பர். இன்று கேலிச்சித்திரத்திற்கு பெயர் போனதாக தினமலர் பத்திரிகை விளங்குகின்றது. இந்த வகைச் சித்திரங்களும் அங்கதத்தின் ஒரு வளர்ச்சியே, குமுதம், ஆனந்த விகடன் போன்ற பொழுது போக்கு இதழ்களும், தினமலர், இந்து, தினத்தந்தி போன்ற பத்திரிக்கைகளும் கேலிச்சித்திரங்களை கையாள்கின்றன. போன்மிகள் ஒரு தனிமனிதன் வங்கியில் கடன்பெற்று வெளிநாட்டில் தலைமறைவாகி விடுவது தற்போது பிரபலமாகியுள்ளது. அதற்கு வங்கி நிர்வாகமே காரணம். இதனைக் கண்டிக்கும் வகையில் மேலும் இன்றைய பரப்பரப்பு செய்தியான நிரவ்மோடியின் மோசடி அதற்கு காரணமான நிர்வாகம் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் இக்கேலிச்சித்திரம் அமைந்துள்ளது.






மின் துண்டிப்பால் மக்கள் அவதிப்படுவதையும், அதனை அரசுக்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கிலும் இக்கேலிச்சித்திரத்தை வெளியிட்டுள்ளனர்.

## சமூக வலைத்தளங்களின்வழி வளரும் அங்கதம்

வலைதளங்களில் அதிகப்படியான சமுதாய அலசல்கள் மற்றும் விமர்சனங்கள் போன்மிகளால் விளக்கப்படுகின்றன. அங்கத உத்தியை அதிகம் போன்மிகளின் வழியே வெளிப்படுத்துகின்றனர். அன்றாட நிகழ்வுகளின் விமர்சனங்களாக இந்த போன்மிகள் இடம் பெறுகின்றன. அங்கதத்தின் அதீத வளர்ச்சிக்கான அடையாளமாக இந்தப் போன்மிகள் விளங்குகின்றன. போன்மி என்பது நடப்பு நிகழ்வின் குற்றங்கள் (அ) சமூக அநீதிகள், அவலங்கள், தனிமனித ஏமாற்றங்கள் அகியவற்றை திரைப்பட வசனங்கள், நகைச்சுவைகள் ஆகியவற்றைக் கொண்டு விமர்சித்தல் ஆகும். சமூக ஆர்வலர்கள்,

 DOI: 10.34256/irjt22255

பாதிப்புக்குள்ளானவர்களின் மனநிலையை இந்த போன்மிகள் பிரதிபலிக்கும். போன்மிகளை நகைப்பகடி, படப்பகடி, போல்மி போன்ற கலைச்சொற்களைப் பயன்படுத்தி அழைக்கின்றனர். மலேசியா உலகத் தமிழ் மாநாட்டில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'போன்மி" என்ற சொல்லாடல் பரவலாக கையாளப்பட்டு வருகின்றது. முகநூல், புலனம், படவரி ஆகியவற்றில் இந்த போன்மிகள் அதிகம் இடம்பெறுகின்றன.







அறிவியல் வளர்ச்சி குழந்தைகளை பாதிப்பதை காலத்தோடு ஒப்பிட்டு உரைக்கிறது. விளம்பரங்களைப் பார்த்து ஏமாற்றம் அடையும் மக்களை எள்ளற்படுத்தும் வகையில் போன்மி அமைந்துள்ளது. இவ்வாறாக போன்மிகளின் வழி அங்கதம் வளர்ந்து வருகின்றது.

## முடிவுரை

அங்கதம் குறித்த கோட்பாட்டை தொல்காப்பியம் விளம்பியிருப்பினும் தமிழுலகில் அதற்கான வளர்ச்சி எட்டப்படவில்லை. நவீன இலக்கியங்களின் வரவினாலும் அயல்நாட்டாரின் வரவினாலும் அங்கதம் பெருவளர்ச்சி பெற்றது. கேலிச்சித்திரம், போன்மி, வலைத்தளக்கவிதைகள் ஆகியவை இலக்கியத்தைக் கடந்து அங்கதத்தை அடுத்தகட்ட வளர்ச்சிக்கு எடுத்துச் சென்றுள்ளன என்பதை இவ்வாய்வின் வழி உணரமுடிகின்றது.

## References


Ilambooranar (2001) Tholkaappiyam, Porulathikaaram, Saivasiththaantha Noorpathippukkalakam, Chennai

Koopaalagrishnakkoan, M. (1935) Thirukkural Moolamum Vishesanaanaviruththiyum, Meenambigai Press, Mathurai, Tamil nadu, India.

Maraimalai, E. (1986) Puthukkavithaiyil Mupperum Uththigal, Thirumagal Puththaga Nilaiyam, Chennai.

Pulavar A. Maanikkam, (2013) Thanippaadal Thirattu Paguthi -1, Poompuhar Pathippakam, Chennai.

Rajendran, (2002) Meeraakavithaigal, Agaram Pathippakam, Chennai

Subramaniyam S.V, (2003) Kayaathara Nikandu, Meiyappan Pathippakam, Chennai

Suntharamoorththi, K. (2002) Porulilakkanak Kootpaadu Tholkaappiyam, Thiruppananthaal Thirumadam, Thiruppananthaal.

Thaesiga Vinayagam Bllai, (1970) Marumakkalvazhi Maanmiyam, Paari nilaiyam, Chennai.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License